இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

மக்கள் மீட்பரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருவேளை யோவான் மெசியாவாக இருப்பாரோ என்று எல்லாரும் தங்களுக்குள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். யோவான் அவர்கள் அனைவரையும் பார்த்து, "நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன்; ஆனால் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார். (லூக்கா 3:15-16)

# அழுக்கான இதயத்தில் வந்து பிறக்க இறைவன் மறுப்பதில்லை!

**வத்திக்கான்:** வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார் (யோவா 1:14) என கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகம் எடுத்துரைக்கும் வார்த்தைகளைத் தான் நாம் நம் மூவேளை இறைவேண்டலில் இணைத்துள்ளோம் என்பதை எடுத்துரைத்து, அவ்வார்த்தைகள் குறித்த தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.



இயேசுவின் காலத்திற்கு முன்னர், இருவேறு எதிரெதிர் உலகங்கள் குறித்து பேசிவந்தனர் என்பதை சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வானுலகிற்கு எதிராக மண்ணுலகையும், முடிவற்ற நிலைக்கு எதிராக, காலவரையறையுள்ளதையும், ஆவிக்கு எதிராக பருப்பொருளையும், தற்போது நற்செய்தியாளர் யோவான், ஒளிக்கு எதிராக இருளையும் சுட்டிக்காட்டுவதைக் காண்கிறோம் என எடுத்துரைத்தார்.

இவ்வுலகின் இருளுக்குள் ஒளியேற்ற வந்த ஒளியாம் இறைவன், நம் இதயத்திற்குள் குடியேற அவரை அனுமதிப்போம் என தன் நண்பகல் மூவேளை இறைவேண்டல் உரையில் அழைப்பு விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகில் ஒன்றுக்கொன்று எதிராக இருந்தவைகள், இயேசு மனித உரு எடுத்ததில், ஒன்றிணைந்து ஒப்புரவாகின என்பதையும் சுட்டிக்காட்டினார்.

நம் துன்பதுயர்களைக் கண்டு இறைவன் பின்வாங்குவதில்லை, மாறாக, இவ்வுலகின் இருளுக்குள் நுழைந்து, நமக்கு உதவவே நம்மிடையே குடிகொள்கிறார் என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நாம் அவரை விட்டு விலகி ஓடினாலும், அவர் நம்மை நோக்கி தேடி வந்துகொண்டிருக்கிறார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

நம்முடைய தகுதிகள் குறித்து நமக்குள் எழும் சந்தேகங்களால் நாம் இறைவனை விட்டு விலகிப்போகும் வேளைகளில், இறைவனின் கண்ணோட்டத்தில் அனைத்தையும் பார்க்க கிறிஸ்மஸ் நமக்கு அழைப்பு விடுக்கிறது என்பதையும் தன் ஞாயிறு நண்பகல் மூவேளை செபவுரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மாடடைக்குடிலில் வந்து பிறந்த இறைவன், நம் இதயங்கள் எவ்வளவு பாவ அழுக்கு நிறைந்ததாக இருந்தாலும், அங்கு வந்து தங்க மறுப்பதில்லை என்பதால், நம் இதயத்தில் அவருக்குரிய இடத்தை தயார் செய்வோம் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்மஸ் குடிலின் முன்பு சிறிது நேரம் அமைதியாக நிற்பதன் வழியாக, நாம் இயேசுவை நம் இதயக்குடிலுக்குள் வரவேற்க முடியும் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் பிரச்சனைகளை இறைவனுடன் பகிர வேண்டும் என்பதற்காக அவர் காத்திருக்கிறார் என்ற நிலையில், நம் இன்றைய சூழலில் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சனைகளையும் அவருடன் பகிர்ந்துகொள்வோம்

# ஏழை மாணவர்க்குக்கு மடிக்கணினி வழங்கியது புனித வின்சன்ட் தெ பவுல் சேவை மையம்

**ஜொகூர் பாரு:** இங்குள்ள அமலோற்பவ அன்னை பங்கின் புனித வின்சன்ட் தெ பவுல் குழுவினர் புதிய, மற்றும் பயன்படுத்தக்கூடிய பழைய 40 மடிகணினிகளை வறுமை நிலையிலுள்ள 40 குடும்பங்களுக்கு வழங்கினர். கடந்த டிசம்பர் 17, 2021 ஆம் நாள், பங்கில் இரண்டு கூட்டங்களில் பங்குத் தந்தை எட்வர்ட் இராயப்பன் அவர்களின் தலைமையில் துணை பங்குத் தந்தை கிளரன்ஸ் மோதோயாவ் அவர்களின் உடனிருப்பில் மேற்கண்ட நிகழ்வு அரங்கேற்றம் கண்டது.




ஒரு குடும்பத்தில் 3 முதல் 8 உடன்பிறப்புகளுக்கு இடையே ஒரு விவேகத் தொலைப் பேசியை பகிர்ந்துகொள்வதன் மூலம், நடமாட்டக் கட்டுப்பாடு ஆணையின் போது, பல ஏழைக் குடும்பங்கள் தங்கள் குழந்தைகள் இயங்கலை வகுப்புகளில் கலந்துகொள்ள சிரமப்படுகின்றனர் என்பதை SSVP உறுப்பினர்கள் கண்டபோது இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. *(தொடர்ச்சி-அடுத்துப்பக்கம்)*

# புனித பிரான்சிஸ் அசிசியார் பங்கின் (SFA) 'எல்லையைக் கடந்த மறைத்தூது' வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியது

**செராஸ்:** உலு லங்காட் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'புனித பிரான்சிஸ் ஆஃப் அசிசி (SFA) பங்கின் 'எல்லையைக் கடந்த மறைத்தூது' பணிக்குழு உதவி செய்து வருகிறது.

"டிசம்பர் 22 அன்று, உலு லங்காட்டில் உள்ள மக்களுக்கு உணவு மிகவும் தேவைப்படுவதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டது. உடனே, மேலும் தாமதிக்காமல், எங்கள் பணிக்குழு உடனடியாக 600



பாக்கெட் சூடான உணவுகளை ஏற்பாடு செய்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து உதவி செய்ததால் பலர் உடனடிப் பசியைப் போக்க முடிந்தது என்று பங்குத்தந்தை என்ரூ மாணிக்கம் OFM Cap அவர்கள் கூறினார்.

தாமான் ஸ்ரீ நந்திங் பகுதியை அடைந்ததும், ஏறக்குறைய அனைத்து வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதையும், வாகனங்கள் நீரில் மூழ்கியிருப்பதையும் குழுவினர் கவனித்தனர். வெள்ளத்தால் அழிந்த



பொருட்களை அகற்றும் பணியில் மும்முரமாக ஈடுபட்டதால், உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் மக்கள் சோர்வடைந்திருந்தனர் என்றார் அருள்தந்தை.

பெரும்பாலான வீட்டுப் பொருட்கள் மற்றும் பாத்திரங்களைப் பயன்படுத்த



முடியாததால் அவர்களால் எந்த உணவையும் தாங்களாகவே தயாரிக்க முடியவில்லை. குழு வழங்கிய உணவை அவர்கள் மிகவும் பாராட்டினர்.

டிசம்பர் 25 அன்று இரண்டாவது பணியின் போது, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மீண்டும் உணவு வழங்கப்பட்டது, அதே நேரத்தில் குழு வேறு என்ன உதவிகள் தேவை என்பதை மதிப்பீடு செய்தது.

ஜனவரி 2 அன்று அடுப்புகள், மெத்தைகள், தலையணைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் போர்வைகள் ஆகியவற்றை வழங்கியது. இந்த பொருட்களில் சில பங்கு மக்களாலும் மற்றும் ரிசார்ட்ஸ் வேர்ல்ட் கெந்திங் விடுதி நிறுவனத்தாலும் நன்கொடையாக வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஜனவரி 4 அன்று நான்காவது பணியின் போது, மொத்தம் 70 மெத்தைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, 'எல்லையைக் கடந்த மறைத்தூது' பணிக்குழு தாமன் ஸ்ரீ மூடா, ஷா ஆலமில் உள்ள 30 குடும்பங்களுக்கும் உணவுப் பொருட்களை வழங்கி உதவியது. இது மலாயா பல்கலைக்கழகத்தின் இளங்கலை மாணவர்களின் கூட்டு முயற்சியாகும்.

# ஏழை மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கியது புனித வின்சன்ட் தெ பவுல் சேவை மையம்

*முதல் பங்கத் தொடர்ச்சி.*

SSVP உறுப்பினர் வனேசா திங் அவர்களின் தலைமையில், சக உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களின் உதவியுடன், இந்த திட்டம் ஆரம்பத்தில் 30 குடும்பங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் நன்கொடையாளர்கள், குறிப்பாக டெல் டெக்னாலஜிஸ் சிங்கப்பூர், மலேசியா ஊழியர்கள் மற்றும் பங்கு மக்களின் தாராளமான முயற்சியில் 36 புதிய டெல் மடிக் கணினிகளுக்கு நிதி பெறுவது சாத்தியமாக்கியது. ஆறு பயன்படுத்தப்பட்ட மடிக்கணினிகளும் நன்கொடையாகப் பெறப்பட்டது. அத்தோடு, ஒவ்வொரு பெறுநருக்கும் இணைய இணைப்புச் செலவுகளைச் சமாளிக்க RM180 உதவித்தொகை வழங்கப் பட்டது.

அன்பளிப்பு விழாவின் போது நேர்காணல் செய்யப்பட்ட மாணவர்களில், கிஷேந்திரன் (வயது 15) கூறுகையில், அவரும் அவரது மூன்று உடன்பிறப்புகளும் இயங்கலை வகுப்புகளில் கலந்துகொள்ள ஒரே விவேகத் தொலைப்பேசியைப் பயன்படுத்த வேண்டும் என்றும், வகுப்புக்கு தாமதமாக வந்ததற்காகவும், வீட்டுப்பாடத்தை சரியான நேரத்தில் சமர்ப்பிக்காததற்காகவும் அவரது ஆசிரியர் அவரைத் திட்டுவார் என்றும் கூறி, மடிக்கணினி உதவிக்கு நன்றி தெரிவித்ததோடு, கடினமாகப் படிப்பதாகவும், தனது குடும்பம் தொழில்நுட்ப ரீதியாக ஆர்வமுள்ளவர்களாக இருக்க உதவ்விருப்பதாகவும் உறுதியளித்தார்.

எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் மற்றும் தொலைத் தொடர்பு ஊடக மாணவி, ஆக்னஸ் சயூன் (21) கூறுகையில், ‘தன்னிடம் முன்பு மடிக்கணினி இருந்தது, ஆனால் அது பழையதாகி, பழுதடைந்து கொண்டே இருந்ததால், அவளுக்கு ஒரு புதிய மடிக் கணினி தேவைப்பட்டது என்றார். தொற்று நோய்களின் போது அவரது தந்தை தனது வேலையை இழந்ததால், அவரது குடும்பத்தின் நிதி நிலைமை அதை அனுமதிக்கவில்லை. இப்போது இந்த புதிய மடிக்கணினி மூலம் அவரால் தனது உடன்பிறந்தவர்களின் இயங்கலை வகுப்புகளுக்காக மடிக்கணி



னியை பகிர்ந்து கொள்ள முடியும் என்றார்.

# திருஅவையில் இவ்வாண்டில் இடம்பெற உள்ள 3 முக்கிய நிகழ்வுகள்-வத்திக்கான் அறிவிப்பு

**வத்திக்கான்:** கோவிட் பெருந்தொற்று இவ்வுலகை தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும் வேளையில், இவ்வாண்டில் மூன்று முக்கிய நிகழ்வுகள் உரோம் நகரில் இடம்பெற உள்ளதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

2019ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஜான் ஹென்றி நியூமேன் அவர்களுடன் மேலும் நான்கு பேர் புனிதர்களாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இரண்டாண்டு 7 மாதங்களுக்குப்பின், இவ்வாண்டு மே மாதம் 15ம் தேதி புனிதர் பட்ட அறிவிப்பு திருப்பலி வத்திக்கானில் இடம்பெற உள்ளது.

இவர்களில் தமிழகத்தின் முதல் புனிதர் தேவசகாயம் அவர்களையும் உட்பட்ட நிகழ்வாக அமையும்.

இந்தியாவின் பொதுநிலையினர் ஒருவர் திருஅவையில் புனிதராக அறிவிக்கப்பட உள்ளது இதுவே முதன்முறையாகும்.

இரண்டாவது முக்கிய நிகழ்வாக, இப்புனிதர் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து ஜூன் மாதம் 22 முதல் 26 வரை, பத்தாவது உலக குடும்பங்கள் மாநாடு வத்திக்கானில் இடம் பெறும்.

கோவிட் பெருந்தொற்று காரணமாக ஏறத்தாழ 2000 பேர் மட்டுமே இக்கருத்தரங்கில் கலந்துகொள்வர் எனவும், அதே நாட்களில் இணையதளம் வழியாகவும், மறைமாவட்டங்களிலும் கருத்தரங்குகள் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு திருஅவையில் இடம்பெற உள்ள மூன்றாவது முக்கிய நிகழ்வாக, செப்டம்பர் 4ம் தேதி 'புன்னகையின் திருத்தந்தை' என அழைக்கப்படும், இறையடியார் திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் அவர்களை அருளாளராக அறிவிக்கும் கொண்டாட்டம் வத்திக்கானில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈப்போ, புனித லூர்து அன்னை பங்கின் ‘மலரும் மகத்துவம்’ பணிக்குழுவின் சிறப்பு வெளியீடு

ஈப்போ: இங்கு சிலிபின் பகுதியில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை பங்கில் தோற்றுவிக்கப்பட்டுள்ள ‘மலரும் மகத்துவம்’ எனும் பணிக்குழு கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி அதன் முதல் காணொலியை வெற்றிகரமாக வெளியிட்டது. ‘இயங்கலை விழிப்புணர்வும் படிப்பினையும்’ என்ற தொடரில் முதல் பகுதியாக, ‘நாம் அன்னை மரியாவுக்கும் இதர புனிதர்களுக்கும் செலுத்தப்படுவது வணக்கமா? வழிபாடா?’ என்ற கேள்விக்குப் பதில் அளிக்கும் வண்ணம் வெளியிட்டுள்ளது.

பங்குத்தந்தை அருள்பணி ரோபர்ட் டேனியல் அவர்களின் ஆதரவிலும் ஆலோசனையிலும் இந்த பணிக்குழு அமைக்கப்பட்டு செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பணிக்குழுவின் தலைவராக சகோ. மார்க்குஸ் அவர்கள் பொறுபேற்றுள்ளார். இப்பணிக்குழு உறுப்பினர்களாக திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர், ஆர்.கே. சாமி, சகாய மேரி மாணிக்கம்,




குளோரியா மத்தியூஸ், சவரிமுத்து GS, ஆபிரகாம் மத்தியூஸ், பிரிசில்லா மார்க்குஸ், செலஸ்தின் ஜெரார்ட், விமல் பெர்சி மற்றும் அலெக்சான்டர் அந்தோணி தாஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர் அவர்களின் குரல் பதிவில் இந்த முதல் காணொளி வெளிவந்துள்ளது. இந்த காணொளியைக் கீழ்க்கண்ட இணைப்பில் காணலாம்.

https://www.youtube.com/watch?v=PU41baaRkLk

# திருத்தந்தை பிரான்சிஸ் ஜனவரி 2022 இறைவேண்டலை மத துன்புறுத்தலுக்கு ஆளானவர்களுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுகிறார்.

2022 ஆம் ஆண்டின் முதல் மாதத்திற்கு, கத்தோலிக்கர்கள் மத பாகுபாடு மற்றும் துன்புறுத்தல்களை எதிர்கொள்பவர்களுக்காக இறைவேண்டல் செய்யுமாறு திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக் கொண்டார்.

ஜனவரி 4 அன்று வெளியிடப்பட்ட காணொளியில் திருத்தந்தை மத துன்புறுத்தலை "மனிதாபிமானமற்றது" மற்றும் "மடமை" என்று குறிப்பிட்டுள்ளார். "பாகுபாடு மற்றும் மதத் துன்புறுத்தலுக்கு ஆளானவர்கள் அவர்கள் வாழும் சமூகங்களில் சகோதர சகோதரிகளாக இருந்து வரும் உரிமைகளையும் கண்ணியத்தையும் காண இறைவேண்டல் செய்வோம்," என்று கூறினார்.



# நம்பிக்கைக்கு செயல்வடிவம் கொடுப்போம்!

திருமுழுக்கு பெறுபவர் முதலில் ஆண்டவரின் ஊழியராக அருள் பொழிவு பெறுகிறார்; இறைத் தந்தையால் தேர்வு செய்யப்படுகிறார்; தூய ஆவியாரால் ஆற்றல் ஊற்றப்பெறுகிறார். இவ்வாறு இனிதே தயார் செய்யப்பட்ட ஒருநபர் ஊழியம் புரிய அதிகாரப் பூர்வமாக அனுப்பப்படுகிறார். இயேசுவைக் குறித்துக் காட்டிய இறைவாக்கினர் எசாய முதல் வாசகத்தில் திருமுழுக்குப் பெறுபவர் ஆற்ற வேண்டிய பணிகளை பட்டியலிடுகின்றார். அப்பணிகளை ஊக்கம் குன்றாமல் ஆற்றிட அவர் பெற்ற ‘அருள் வாழ்வு’ துணை நிற்கிறது என்பதையும் விளக்குகிறார். இது நமக்குக் கற்றுத்தரும் பாடம்தான் என்ன?

1. தந்தை திருவுளத்துக்கு இயேசு பணிந்ததை கூறுகிறது.
2. திருமுழுக்கு இயேசுவின் பணியேற்பு விழாவாக அமைகிறது.
3. தந்தையின் நற்சான்று பெற்றவராக, அன்பு மைந்தராக இயேசு வெளிப்பட்டதை எண்பிக்கின்றது.
4. ஆவியாரின் அருள் பொழிவூட்டலை நினைவுப் படுத்துகிறது.
5. திருமுழுக்கு ஒவ்வொருவரின் வாழ்விலும் நிகழ வேண்டிய மாற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறது.
6. மூவொரு இறைவன் உறவின் சங்கமமாக ஒன்றிணைந்திருப்பதை உணர்த்துகிறது.

இயேசுவை உலகின் பாவம் போக்கும் செம்மறியாகச் சுட்டிகாட்டி நிற்கும் திருமுழுக்கு யோவான், தன்னை வெறும் ஒரு குரல் ஒலியாக, அதுவும் பாலைவனத்தில் ஒலிக்கும் குரலாக, தனது பணியை ஒரு ஆயத்தப் பணியாக அடையாளம் காட்டுகிறார். “எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர்” என்ற அவர் வார்த்தைகளில் நிறைந்து நிற்பது திருமுழுக்கு யோவானின் பணிவும் உண்மைக்கான தியாகமும் ஆகும். “உங்களில் பெரியவனாயிருக்க விரும்புபவன் கடையனாயிருக்கட்டும்” என்ற இயேசுவின் வாக்கு இம்மண்ணில் எதிரொலிக்கும் முன்பே, தனது வாழ்வில் வாழ்ந்து காட்டியவர் திருமுழுக்கு யோவான்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் காண்பது என்னவெனில், தனக்குப் பின்னால் ஒருவர் பணிப்பொறுப்பேற்க வருகிறார் என்றாலே தாங்காத மனிதர்கள் வாழும் சமுதாயத்தில், அதிலும் குறிப்பாக வருபவர், தனக்கு மேலானவர் என்றால் அவரைப் பற்றி ஏதாவது குற்றங்குறைகள் கூறி அவர் பெயருக்கு ஊறு விளைவிக்கும் இச் சமுதாயத்தில் இன்றைய நற்செய்தி விளக்கமும் ஊக்கமும் அழைப்பும் விடுக்கிறது என்பது தெளிவாகிறது.

ஆக, திருமுழுக்குப் பெற்ற நாம், பிறருக்கு விடுதலை தரும் வாழ்வை வழங்கப் பணிக்கிறோம். அதற்காக சிறப்பாகத் தேர்ந்து கொள்ளப்படுகின்றோம். மூவொரு இறைவனை மாதிரியாகக் கொண்டு தம்மோடும், பிறரோடும், இறைவனோடும் உறவில் வளர அழைக்கப்படுகின்றோம்.

இத்தகைய பொருளுள்ள விழாவை நாம் கொண்டாடும் வேளையில் நமது திருமுழுக்கை நினைவுகூர்வோம். அன்று நாம் பெற்ற புது வாழ்வு நம்மில் எவ்வளவு வளர்ச்சி கண்டிருக்கிறது என்பதை ஆய்ந்து பார்ப்போம். திருமுழுக்கு அர்ப்பணத்தை திறம்பட வாழ முனைவோம். இவ்வார்த்தைகளை நாம் ஆழமாக சிந்தித்துப் பார்த்தோம் எனில், திருமுழுக்கின் முக்கியத்துவம் நமக்குப் புரிந்துவிடும். ஏனெனில், திருமுழுக்கின்போது ஒருவர் மறுபிறப்பு அடைகிறார். எனவே அத்தகைய மறுபிறப்பினை நாம் அர்த்தமுள்ளதாக மாற்ற, இயேசுவின் மதிப்பீடுகளின்படி நடப்போம்.

*ஆ.வி.டேவிட், குளுவாங்*

**ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | எசா 40: 1-5,9-11 |
| தி. பாடல்: | 104: 1-2. 3-4. 24-25. 27-28. 29-30 |
| 2-ம் வாசகம்: | தீத்து 2: 11-14; 3: 4-7 |
| நற்செய்தி: | லூக் 3: 15-16,21-22 2 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை—பெருவிழா